1971 டிசம்பர் 4]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவை நடந்து கொண்டிருக்கும்போது அதிகாரிகள் அவைக்குள் வருதல் குறித்து.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சபை நடந்து கொண்டிருக்கும்பொழுது அரசாங்க அதிகாரிகள் சபைக்குள்ளே வந்து செல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடந்து கொண்டிருக்கும்பொழுது அதிகாரிகள் வருவது சரியல்ல. தவறுதலாக நடைபெற்றிருக்கிறது. அவர்கள் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. வினக்கள் விடைகள்—தொடர்ச்சி.

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் விற்பனை செய்ய உரிமை பெற்றவர்கள் நூற்றுக்கு இவ்வளவு சதவீதம் என்று கழிவுத் தொகை பெற்றுக்கொண்டும் கூட, மேற்கொண்டு, முத்திரைத் தாள்கள் வாங்கும் விவசாயிகளிடமிருந்து 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாங்குகிறார்கள். எனவே அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்கக்கூடிய வகையில் அதிகமாக முத்திரைத் தாள்கள் விற்பனை செய்கிறவர்களைப் போடக்கூடிய முறையை அரசாங்கம் கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி எங்காவது தவறு ஏற்பட்டால் கனம் உறுப்பினர் அவர்கள் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

காங்கேயம் பகுதியில் வைரக்கற்கள்

*81 வின.—திரு. கோவை செழியன்

திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

காங்கேயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறந்த வைரக்கற்கள் கிடைப்பதை ஆராய்ந்து நல்ல முறையில் பயன்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில புவியியல் பிரிவினாலும் இந்தியப் புவியியல் பிரிவினாலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. வைரக்கற்கள் இப்பகுதியில் கிடைப்பதாகத் தகவல் இல்லை. ஆனால்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1971 டிசம்பர் 4

இவ்விடங்களிலிருந்து பெல்ஸ்பர், குவார்ட்ஸ் மற்றும் பெரில் போன்ற சாதாரண மதிப்புள்ள கற்கள் மிக சொற்ப அளவில் கிடைப்பதால், இந்த கற்களைப் பெரிய அளவில் வெட்டியெடுத்துப் பயன்படுத்த வாய்ப்பு இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, காங்கேயத்தைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் ஏராளமான வைரக்கற்களும், செமி ப்ரஷ்யஸ் கற்களும் கிடைக்கின்றன. எனவே ஜெயப்பூர் வியாபாரிகள் காங்கேயத்திற்கு வந்து அரசாங்கத்திற்குத் தெரியாமல் 10,000 ரூபாய், 12,000 ரூபாய் என்று காண்டிராக்ட் மூலம் எடுத்து வெளியே கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கிறார்கள். உலகப் பேரழகி கிளியோபாத்ராவின் மார்பிலேயிருந்தது படியூர் வைரம் என்று டாக்டர் ஆரோக்கியசாமி என்பவர் ஆராய்ச்சியில் எழுதியிருக்கிறார்கள். எனவே, அந்தக் கற்களை அரசாங்கமே தொழிற்சாலை அமைப்பதன் மூலம் எடுத்துச்செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிளியோபாத்ராவைப் பற்றித் தெரியாது. ஆனால் இதிலே கிடைக்கும் கற்கள் செமி ப்ரஷ்யஸ் என்று குறிப்பிடுவதால் கனம் அங்கத்தினர் அவர்கள் அது குறித்துத் தகவல் தந்தால் பரிசிலித்து, யாராவது அனுமதியில்லாமல் எடுத்துச் செல்வதாகயிருந்தால் விசாரணை செய்யலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த தென்நிலை, சின்ன தாராபுரம் போன்ற ஊர்களில் செமி ப்ரஷ்யஸ் கற்கள் கிடைப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள பாமர மக்களுக்கு அதன் மதிப்புத் தெரியாமல் இருப்பதால் கொள்ளை லாபம் அடிக்கும் வணிகர்களிடம் குறைந்த விலைக்கு அவைகளைத் தருகிறார்கள். ஆகவே இதன் உண்மையான மதிப்பை பாமர மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் ஒரு நிபுணரை அந்த வட்டாரத்தில் அரசாங்கம் நியமிக்குமா? மேலும் இவைகளுக்காக ஒரு பட்டறையை அந்தப் பகுதியில் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பூமியில் உள்ள இதுபோன்ற பொருள்களை அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் யாரும் எடுக்க முடியாது. அப்படிப்பட்ட தகவல் இருந்து அனுப்பி வைத்தால் விசாரிக்கலாம்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எங்கெங்கு வைரக் கற்கள் கிடைக்கின்றன, எந்தெந்த இடங்களில் கிடைக்கின்றன என்பதை அரசு தெரியப்படுத்துமா?

1971 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோவை மாவட்டத்தைப் பற்றியது மூலக் கேள்வி. இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் முத்துக்குளிவயல் என்ற ஊர் இருக்கிறது. மன்னர்கள் ஆண்ட காலத்தில் அங்கு உயர்தர முத்துக்கள் எடுத்ததாக அறிகிறோம். பின்னர் சரியான போக்குவரத்து வசதியில்லாமலிருந்ததால் அந்தத் திட்டம் கைவிடப் பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது கோதையாறு மின் திட்டம் வந்து போக்குவரத்து வசதி ஒருமுறையாக அமைந்திருப்பதால், அந்தத் திட்டத்தைப் பற்றி மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். தனியாகக் கேட்டால் அறிந்து பதில் சொல்கிறேன்.

பனியன்கள் ஏற்றுமதி

* 82 வினு.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து பனியன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் மோகன் நிட்டிங் தொழிற்சாலை வெளிநாடுகளுக்கு நேரடியாக பனியன்களை ஏற்றுமதி செய்கிறது. 1970-71-ம் ஆண்டு ரூ. 2,30,000 மதிப்புள்ள பனியன்கள் ஏற்றுமதி செய்யப் பட்டன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நிட்டிங் பேக்டரிகளிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான துணிகள் இன்னும் இருக்கின்றன. அதற்கு மேலும் அரசாங்கத்தின் மூலம் ஊக்கம் கொடுத்து விரிவுபடுத்த புதிய சிறப்பான திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்காகத்தான் பனியன் உற்பத்தியாளர்களுக்குத் தொழில் கூட்டுறவு அமைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். செய்து முடித்த பின்னால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.